www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

**மாதிரித் தேர்வு-1**

**2022 - 2023**

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு**

**பாடம் : தமிழ்**

**நேரம்: 3 மணி** **மதிப்பெண்கள்: 90**

## பகுதி-1

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** (14 x 1 = 14)

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

✓இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. யார் ?எது? ஆகிய வினாச் சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே—

அ) அஃறிணை, உயர்திணை ✓ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத் திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

3. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது—

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள்

✓இ) மழைத் துளிகள் ஈ) நீர்நிலைகள்

4. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

✓இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

ஈ) வல்லினமெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

5. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே". என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூக முறை ✓ஈ) தந்தைவழிச் சமூக முறை

6. 'ஜயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' - என்ற கூற்றிற்கு உரிய நூல்

அ) தமிழ்விடு தூது ✓ஆ) சிந்தாமணி

இ) சிலப்பதிகாரம் ஈ) திருக்குறள்

7. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் ✓இ) காட்சி ஈ) ஒலி

8. கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம் துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி ,காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி

இ) கூற்று தவறு,காரணம் தவறு ✓ஈ) கூற்று சரி, காரணம் சரி

9. "பாவிகம் என்பது காப்பியப் பண்பே" என்ற நூற்பா வரி இடம் பெற்ற நூல்—

அ) தொல்காப்பியம் ஆ) சிலப்பதிகாரம்

✓இ) தண்டியலங்காரம் ஈ) நன்னூல்

10. பொருத்துக

அ) மந்திரிகை - 1) பட்டத்து யானை

ஆ) அரசு உவா - 2) மூங்கில்

இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்

ஈ) கழை - 4) எடை அளவு

✓அ) 3, 1, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 1, 2, 3, 4 ஈ) 4, 3, 2, 1

11. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்—

✓அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்

ஆ) மனத்திட்பம் உடையவர்

இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

ஈ) சூதாடும் இடத்தில் காலம் கழிப்பவர்

12. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்- இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு ஆ) பிறந்து ✓இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

13. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்—

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ✓ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

14. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

✓அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

## பகுதி-2

### பிரிவு -1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3 x 2 = 6)

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக

17. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

18. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

### பிரிவு -2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2 x 2 = 4)

19. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

20. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு -3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** (7 x 2 = 14)

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

விலை,விளை,விழை

23. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

அ) குமரன் வீடு பார்த்தேன்

ஆ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்

24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

ஐப்பசி அடை மழையில் ஊருணி நிறைந்தது.

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க

அ) பலகை ஆ) கோவில்

26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

ரவைக்கு சித்தப்பன காவலுக்கு போவ சொல்.

27. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

28. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) ஏழையென ஆ) உரனுடை

30. கலைச்சொல்லாக்கம் தருக

அ) Animation ஆ) Sound Effect

## பகுதி-3

### பிரிவு -1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2 x 4 = 8)

31. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ் நதி கூறுகிறார்?

### பிரிவு -2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** (2 x 4 = 8)

35. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

### பிரிவு -3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3 x 4 = 12)

39. அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

(அல்லது)

ஆ) சொற்பொருள் பின்வரும் நிலை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

1. நேற்று முதல்---(அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது
2. உங்களுக்கு---(யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
3. முருகன் ---(வேகம்)சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை
4. நம்முடைய---(தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

41. இலக்கிய நயம் பாராட்டுக (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒன்னாதார்.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

42. பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக

அ) யானைக்கும் அடிசறுக்கும்

ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

43. கீழ்க்காணும் தலைப்பில் சொந்தநடையில் எட்டுவரிக்கு மிகாமல் கவிதை எழுதவும்.

கல்வி (அல்லது) தாயன்பு

43. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழி என்பது, மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே, மக்கள் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல்வேட்கை, தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது, மொழிவளர்ச்சியே ஆகும். மனம் என்பது, பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே, பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள்:**

1. மொழி என்பது யாது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

## பகுதி -4

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** (3 x 6 = 18)

44.(அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

(அல்லது)

(ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்துவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45.(அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46.(அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன". இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க

## பகுதி -5

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** ( 4 + 2 = 6)

(அ) காய்நெல் அறுத்துக் - எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை அடி பிறழாமல் எழுதுக.

(ஆ) 'செயல்' என முடியும் குறளை அடி பிறழாமல் எழுதுக.